விலை: 50.00
பக்கங்கள் :12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 107 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 22 புதன்கிழமை (05.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

**அரசுடன் எவரும் இணையலாம்**
3ஆம் பக்கம் பார்க்க

**டெங்கு நோயாளர் மீண்டும் அதிகரிப்பு**
3ஆம் பக்கம் பார்க்க

**பேக்கரி பொருட்களின் விலைகள் குறைக்கப்படாது**
5ஆம் பக்கம் பார்க்க

**தென்பகுதி நீதிமன்றங்களின் தீர்ப்புக்களே மதிக்கப்படுகின்றன**
5ஆம் பக்கம் பார்க்க

## வெடுக்குநாறிமலை தொடர்பாக
# சரியான தீர்மானம் மேற்கொள்ளப்படும்



### அமைச்சரவையில் ஜனாதிபதி ரணில் உறுதி

(கொழும்பு)
வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பாக சரியான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அமைச்சரவையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உறுதியளித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பக்கெட் பால் பருகிய
# 12 மாணவர்கள் வைத்தியசாலையில்
### கிளிநொச்சியில் பரபரப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் உள்ள தனியார்
11

## வாகனங்களுக்கான
# எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்பட்டுள்ளது



(கொழும்பு)
வாகனங்களுக்கான எரிபொருள் கோட்டா இன்று முதல் அதிகரிக் கப்படுவதாக எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.
11

# ‘இலங்கை சிங்கள பௌத்த நாடு’ நாட்டில் இனப் பிரச்சினை இல்லை
### பாராளுமன்றில் சரத் வீரசேகர

(கொழும்பு)
இலங்கை தேரவாத சிங்கள பௌத்த நாடு. ஆகவே பௌத்த மரபுரிமைகளை நாட்டு மக்கள் அனைவரும் பாதுகாக்க வேண்டும்.
இனப்பிரச்சினை உள்ளது என ஜனாதிபதி குறிப்பிடுகிறார், ஆனால் நாட்டில் இனப் பிரச்சினை என்பதொன்று கிடையாது, தமிழ் அரசியல் வாதிகளே இனப்
11

# பூநகரியில் 98 ஏக்கர் காணி அபகரிக்க முயற்சி
### மக்களின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டது




(கிளிநொச்சி)
கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை பகுதியில் 98 ஏக்கர்
11

# கிளிநொச்சியில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை



(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் குடும்பஸ்தர் ஒருவர் மண்வெட்டி பிடியால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.
11

# ‘சிவதோஷம் நாட்டுக்கு குலநாசம்’
### சபையில் சிறீதரன் எம்.பி



(கொழும்பு)
"சிவதோஷம் என்பது குலநாசம்" என்ற பழமொழிக்கு அமைய இந்த நாடு அழிவை நோக்கி செல்லவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.
பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் உரையாற்றிய சிறீதரன், சிவன் மீது கைவைக்கப்பட்டுள்ளமை பேராபத்தை
11

## அனைத்து தொழிற்சங்கங்களும்
# அரசாங்கத்துக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)
இலங்கையில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து நேற்று பிற்பகல் கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தன.
அரசாங்கத்தின்
02

## 1,290 ரூபாயினால்
# லாஃப் எரிவாயு விலைகள் குறைப்பு

(கொழும்பு)
எரிவாயுவின் விலைகளை குறைக்க லாஃப் எரிவாயு நிறுவனமும் தீர்மானித்துள்ளது.
11

## தலைமன்னார் – தனுஷ்கோடி
# கப்பல் போக்குவரத்து தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)
தலைமன்னாரில் இருந்து தமிழகம் தனுஷ் கோடிவரை "ராமர்பாலம்" பகுதி ஊடாக கப்பல் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலும், ஆன்மீக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது சம்பந்தமாகவும் விசேட கலந்துரையாடலொன்று
12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L Physics

**Physics Domain Zoom unit @ Jaffna**

## பொறியியல்

**(விசையும் இயக்கமும்)**

Past Paper Classes (1979 - 2022)

With Theory Revision

**T.U.Jiinthu**

Zoom ID: 811 4918 5666

PW: TJ7

ஆரம்பம் 06 april 7.00Pm

- முதல் இரு வகுப்புக்களிலும் கட்டணம் இன்றி இணைந்து வகுப்புக்கள் பயனுள்ளதாயின் மாத்திரம் தொடரவும்.
- நேரடி வகுப்புக்கள் யாழ்.நகர் Science Collegeல் நடைபெறுகின்றன.

(15149) **T.P: 076 603 4895**


## சரியான...

வெடுக்குநாறி விவகாரத்தில் சிலைகள் உடைக்கப்பட்ட போது ஏற்பட்ட உணர்வுகளைவிட, கடந்த சில தினங்களில் வெளிப்படுத்தப்பட்ட சில தரப்புக்களின் வியாக்கியானங்கள் எமக்கு ஏற்படுத்திய உணர்வுகள் ஆழமானவை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அதிருப்தி வெளியிடப்பட்டநிலையில், குறுக்கிட்ட ஜனாதிபதி எதிர்வரும் வாரங்களில் விரிவாக கலந்துரையாடி சரியான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

குறித்த அமைச்சரவை கூட்டத்தில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

வெடுக்குநாறிமலையை 2018 ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களம் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளப் படுத்தியிருந்தது. (ஆனாலும் இதுவரை அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை)

தொடர்ச்சியாக, 2019 ஆண்டிலிருந்து வெடுக்குநாறிமலையில் அமைந்திருக்கும் புராதன ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுக்கு தொல்லியல் திணைக்களத்தினால் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே 2020 ஆம்ஆண்டு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. குறித்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் பொதுமக்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான தடை உத்தரவுக்ளையும் பிறப்பிக்காதநிலையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பிவைத்துள்ளதாக சொல்லப்படுகிறது.

இதுதொடர்பாக சட்டமா அதிபர் தரப்புக்களுடன் கலந்துரையாடிய போது, குறித்த வழக்கு கோவை இன்னும் தமக்கு கிடைக்கவில்லை எனவும், கிடைத்தவுடன் உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆக, வெடுக்குநாறி விவகாரத்தில் நீதிமன்றம் எந்தவிதமான தடை உத்தரவுகளையும் வழங்காதபோதிலும், வழக்கு நிலுவையில் இருப்பதைகாரணம் காட்டி, உடைக்கப்பட்ட சிலைகளை மீளப்பிரதிஸ்டை செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதேவேளை, குருந்தூர்மலையில் விகாரை அமைப்பதற்கு இடைக்கால தடையை நீதிமன்றம் விதித்திருக்கின்ற நிலையிலும் விகாரை கட்டி முடிக்கப்பட்டிருப்பதை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் தமிழ்மக்களைமாத்திரமல்ல, நியாயமாகவும் நடுநிலையாகவும் சிந்திக்கும் அனைவருக்கும் வேதனையை ஏற்படுத்தும் என்றார்.

இந்நிலையில் குறுக்கிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயம் தொடர்பாக தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்திகளையும் அதில் இருக்கின்ற நியாயத்தினையும் புரிந்து கொள்வதாகவும் எதிர்வரும் வாரங்களில் சம்மந்தப்பட்ட அனைவருடனும் கலந்துரையாடி சரியான தீர்மானத்தினை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தன்னுடைய நிலைப்பாடு எனவும் தெரிவித்தார். (ம-7,9)


## சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்



29 வருடங்கள் சுகாதார தொழிலாளியாக கடமையாற்றி இன்றிலிருந்து ஓய்வு பெற்று செல்லும்

**திரு. மாட்டின் சிங்கோ கருணாரட்ண**

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடும் சுகதேகியாகவும் வாழ பிறந்தநாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Best Wishes

**ஊழியர் நலன்புரிச் சங்கம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

(15146)



## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகர், நல்லூர், கச்சேரி, அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை.

(15148)

**076 738 6189**


## அரசாங்கத்துக்...

நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக தொழில்வல்லுநர்களின் தொழிற் சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரிக்கொள்கைகளை மாற்று, புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைநீக்கு, பொது சொத்துக்களை விற்பதைநிறுத்து போன்ற பல விடயங்களை முன்வைத்து தொழிற் சங்கங்கள் நேற்று தாங்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ம-7,9)


# 45 ஆம் நினைவுநாள் அழைப்பு

கடந்த 22.02.2023 புதன்கிழமையன்று அமரத்துவமடைந்த எமது அன்பு மகன்

**அமரர்**

## செல்வன் ரகுபதி அபிஷன்



அவர்களின் 45 ஆம் நினைவுநாள் ஞாபகார்த்த நிகழ்வு எதிர்வரும் 07.04.2023 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதனை எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

7 ஆம் வட்டாரம்,
சிவநகர்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தகவல் : ரகுபதி செல்லம்
(வயறிங் ரகு)
077 595 7800

(C-6305)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய புற்றுநோய் உபகரணங்களுக்கு பதிலாக பழைய உபகரணங்கள்

## நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து என்கிறார் சஜித்

(கொழும்பு)

புற்றுநோய் மருத்துவமனைக்கு புதிய புற்றுநோய் எதிர்ப்பு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பதிலாக பழைய உபகரணங்களை கொள்வனவு செய்யவுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

செயலாளர் அனுப்பிய கடிதத்தின் பிரதியை சமர்ப்பிப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், புற்றுநோய் சிகிச்சை இயந்திரங்கள் புதுப்பிக்கப்படாமையால் நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.



அண்மைய கதிர்வீச்சு இயந்திரங்களை கொள்வனவு செய்வதையும் நிறுவப்பட்டவற்றை புதுப்பிப்பதையும் தவிர்த்து, காலாவதியான கதிர்வீச்சு இயந்திரங்களை கொள்வனவு செய்ய செயலாளர் ஏன் முயற்சிக்கிறார் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார். (நி)

# புதிய றேடர் தளத்தை இலங்கையில் அமைக்கும் சீனா

## பிரித்தானிய இணையத்தளம் செய்தி வெளியீடு

**(லண்டன்)**

**இந்தியப் பெருங்கடலில் உள்ள இங்கிலாந்து மற்றும் அமெரிக்க இராணுவத் தளங்களை உளவு பார்க்கும் வகையில் புதிய றேடர் தளத்தை இலங்கையில் அமைக்க சீனா திட்டமிட்டுள்ளதாக பிரித்தானிய இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

இலங்கை உளவுத்துறை தரப்புக்களால் வெளிப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம், பீஜிங், இலங்கைக்கு வழங்கிய தமது கடன்களை மூலோபாய ஆதாயத்திற்காக பயன்படுத்துவதை சுட்டிக்காட்டுவதாக நிபுணர்களை கோடிட்டு குறித்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

தொலைதூர செயற்கைக்கோள் பெறும் தரை நிலையத்திற்கான இந்த திட்டமிடல், சீன அறிவியல் கல்லூரியின் ஏரோஸ்பேஸ் தகவல் ஆராய்ச்சியால் வழிநடத்தப்படுகிறது.

இதன்படி குறித்த நிலையம், மாத்தறை தெற்கு முனையில் தெவுந்துறை குடா என்ற தெய்வேந்திர முனைக்கு அருகிலுள்ள அடர்ந்த காட்டில் அமைக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

# சலவைத்தூள் பக்கற்றுகளால் சூழலுக்கு அதிக பாதிப்பு

## தடை செய்வது தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

சலவைத் தூள் பக்கற்றுகளினால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் அதனை தடை செய்வது தொடர்பில் அரசாங்கத்தின் சுற்றாடல் திணைக்களங்கள் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜயசிங்க தெரிவிக்கையில்,

20 கிராம் மற்றும் 20 மில்லி சலவைத்தூள் மற்றும் திரவ பக்கற்றுகளை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் 250 கிராம், 500 மற்றும் கிலோ பக்கற்றுகள் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தக்கூடிய இந்த வகை பொலித்தீன் பாவனையை குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நீர் நிலங்களில் சலவைத் தூள் பக்கற்றுகளை அதிகளவில் வீசுவதால் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்ட மூலத்தை உருவாக்குவதற்கு அனுமதி கோரி சமர்ப்பித்த பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கோரும் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உருவாக்கும் மற்றுமொரு முயற்சியாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இதே போன்ற பொறிமுறையை மாதிரியாகக் கொண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும் தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பின்னர் இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தனர்.

யுத்தத்திற்குப் பிந்தைய சூழலில் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அத்தகைய அமைப்பின் நன்மைகள், தீமைகள் குறித்து இருவரும் அங்கு கலந்துரையாடியுள்ளனர்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் 21 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றும் இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் வழக்குகளை விசாரிக்க தனித்தனியாக செயற்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கதவு திறந்தே உள்ளது

## அரசாங்கத்துடன் எவரும் இணையலாம்


### ஜனாதிபதி ரணில் அழைப்பு

(கொழும்பு)

அரசின் கதவு எந்நேரமும் திறந்தேயுள்ளது. அரசாங்க த்துடன் எவரும் இணையலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து சிலர் அரசாங்கத்துடன் பக்கம் தாவவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, இது புனை கதை என்றும் பணத்தையும் பதவியையும் கொடுத்து சிலரை வாங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார் என்றும்



குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த நிலையில் மேற்படி விடயம் தொடர்பில் ஜனாதிபதி கருத்துரைக்கும் போது, "கட்சி அரசியலுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி செயற்பட விரும்பும் எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணை யலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற பாராளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கிடையில் ஒற்றுமை மிகவும் அவசியம். இது கட்சியை வளர்க்கும் நேரமல்ல.

நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நேரம். எனவே, எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் அரசாங்கததுடன் இணைந்து நாட்டுக்காகச் செயற்படவேண்டும்.

கடந்த காலங்களில் நடந்தது போல் கோடி ரூபாய், அமைச்சுப் பதவிகள், சலுகைகள் வழங்கி எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை இந்த அரசாங்கம் விலைக்கு வாங்கவில்லை என தெரிவித்துள்ளார். (நி)

## புத்தாண்டு காலத்தில்

# கேக்கின் விலையை குறைக்க அவதானம்

(கொழும்பு)

புத்தாண்டுக் காலத்தில் கேக்கின் விலையை குறைப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி தொழிலுக்கு தேவையான முட்டை வரத்து தொடர்ந்தும் சீராக இருந்தால் கேக்கின் விலையை குறைக்க முடியும் என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார். (நி)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 19 ஆயிரத்திற்கும் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை - லக்னோ போட்டியை காண வந்த சினிமா பிரபலங்கள்




ஐ.பி.எல் தொடரின் 6 ஆவது போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் லக்னோ சுப்பர் ஜெய்ண்ட்ஸ் அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் டோனி தலைமையிலான சென்னை அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முதல் வெற்றியை பதிவு செய்தது.

இந்நிலையில் இந்த போட்டியை நடிகர் சிவகார்த்திகேயன், ஹரிஷ் கல்யாண், நகைச்சுவை நடிகர் சதீஷ், நடிகை கீர்த்தி சுரேஷ், நதியா, இவானா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் நேரில் கண்டு ரசித்தனர். (4)

# ஐ.பி.எல் தொடரில் 5000 ஓட்டங்கள் டோனி புதிய சாதனை

16 ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 6 ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் சென்னை சுப்பர் கிங்சும், லக்னோ சுப்பர் ஜெயன்ட்சும் மோதின.

டாஸ் வென்ற லக்னோ அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி சென்னை அணி முதலில் பட்டிங் செய்தது.

20 ஓவர்கள் முடிவில் சென்னை அணி 7 விக்கெட் இழப்புக்கு 217 ஓட்டங்கள் குவித்தது. இதையடுத்து 218 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்கள் எடுத்தது.

இதன்மூலம் லக்னோ அணியை 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, லீக் சுற்றின் தனது முதல் வெற்றியை பதிவு செய்தது. இந்த போட்டியில் 12 ஓட்டங்கள் எடுத்த சென்னை கப்டன் டோனி ஐ.பி.எல் கிரிக்கெட்டில் 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். அவர் 236 ஆட்டங்களில் ஆடி 24 அரைசதம் உட்பட 5004 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இந்த மைல்கல்லை கடந்த 7 ஆவது வீரர் டோனி ஆவார். ஏற்கனவே விராட் கோலி, ஷிகர் தவான், டேவிட் வார்னர், ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, டிவில்லியர்ஸ் ஆகியோர் ஐ.பி.எல் இல் 5 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் சேர்த்துள்ளனர்.(4)



# வான்கடே மைதானத்தில் டோனிக்கு சிலை

2011 ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை வென்றதை நினைவு கூரும் விதமாக வான்கடே மைதானத்தில் டோனிக்கு சிலை அமைக்க மும்பை கிரிக்கெட் சங்கம் முடிவு செய்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் 28 ஆண்டு கால காத்திருப்பை கப்டன் டோனி தலைமையிலான இந்திய அணி நிறைவேற்றியது.

இந்த போட்டியில் விக்கெட்டுகள் மலமலவென சரிந்த போது, ஆட்டத்தின் முக்கியமான சந்தர்ப்பத்தில் முன்னேறி, ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்கள் கப்டன் டோனி குவித்தது வெற்றிக்கு பெரிதும் உதவியது.

இந்நிலையில் 2011 உலக கிண்ண இறுதிப் போட்டியில், டோனி அடித்த வரலாற்று சிறப்புமிக்க "Winning Shot" சிக்ஸரை நினைவு கூரும் விதமாக வான்கடே மைதானத்தில் டோனிக்கு சிலை ஒன்றை அமைக்க மும்பை கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது.

அத்துடன் இந்த சிலையை டோனியே திறந்து வைக்க அவரிடம் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2801

**சயந்தன்**


செல்போன் ரீப்பேராகி சர்வீஸ் சென்டருக்கு கொண்டு போறது



உடம்பு சரியில்லாத குழந்தைய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போற மாதிரி 'என்னாச்சோ ஏதாச்சோ' என்று பீலிங்காவே இருக்கு

**சாளினி**

எல்லா மிருகங்களையும் கூண்டிற்குள் அடைத்த மனிதன்



கொசுவிற்குப் பயந்து வலைக்குள் புகுந்து கொண்டான்

**கனிஸ்ரன்**

கல்யாண வீட்டில்
செருப்பை தொலைத்தவன்
எழுதிய கவிதை...!!!
"உள்ளே ஒரு ஜோடி
சேர்ந்து விட்டது"
"வெளியே ஒரு ஜோடி
தொலைந்து விட்டது"

**டிசானா**



அக்கால எமது ஆசிரியர்கள் அடித்த அடியை மனித உரிமையில் முறையிட்டிருந்தால் அவர்கள் இன்றும் சிறையில் இருந்திருப்பார்கள்...
அவர்கள் அவ்வாறு அடித்து எம்மை திருந்தவில்லை என்றால் நாம் இன்னும் சிறையில் இருந்திருப்போம்

**சஞ்சீவன்**

சந்துரு : டாக்டர் எனக்கு தூக்கத்தில் திட்டுற வியாதி இருக்குன்னு சர்டிபிகெட் தாங்க
டாக்டர் : எதுக்கு?
சந்துரு : என் மனைவியைத் திட்டத்தான்
டாக்டர் : இப்பத்தான் உங்க மனைவி தூக்கத்திலே அடிக்கிற வியாதி இருக்குன்னு சர்டிபிகெட் வாங்கிக்கிட்டு போனாங்க

**மிதுனா**

குழந்தையாக இருக்கும் போது தூங்கு தூங்கு என்று தொட்டிலில் போட்டு ஆட்டுவது




வளர்ந்த பின் தூங்கினால் சோம்பேறி, தண்டச்சோறு என்று திட்டுவது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி நீதிமன்றங்களின் தீர்ப்புகளே மதிக்கப்படுகின்றன

## சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் இருக்கின்ற நீதிமன்றங்களில் தீர்ப்புகள் மதிக்கப்படுவதில்லை எனவும் நீதிபதிகளின் கட்டளைகள் செல்லாக் காசாக மாற்றப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் உரையாற்றிய சிறீதரன், இலங்கையில் நீதித்துறை முடக்கப்பட்டுள்ளதாகவும் தென்பகுதியில் இருக்கின்ற நீதிமன்றங்களின் தீர்ப்புகளே மதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் இருக்கின்ற நீதிமன்றங்கள் அனைத்துக்கும் ஒரே நீதியும் ஒரே சட்டமும் இருந்திருந்தால், முல்லைத்தீவு நீதிபதி பிறப்பித்திருந்த உத்தரவுக்கு அமைய குருந்தூர் மலையில் இடம்பெற்றிருந்த சம்பவத்தை தடுத்திருக்க முடியும்.

ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக இனவாதச் செயற்பாடுகளை அரங்கேற்றும் அரசு

## பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

(கொழும்பு)

இனவாதச் செயற்பாடுகளை தொல்பொருள் திணைக்களத்தின் வாயிலாக அரசாங்கம் அமுல்படுத்தி வருகின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உரையாற்றிக் கொண்டிருக்கையில் சபையில் குறுக்கிட்டு உரையாற்றும் போதே இரா.சாணக்கியன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இனவாதி மட்டுமல்லாது இனவாத செயல்களையும் அங்கீகரித்து அதனை அமுல்படுத்தி வருகின்றார்.


தொல்பொருள் திணைக்களம் என்ற போர்வையில் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்துள்ளார்.

வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, குசலான மலை, அரிசி மலை ஆகிய பகுதிகளில் தற்பொழுது புதிய பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளார்கள்.

தொல்பொருள்களை பாதுகாப்பதற்கு தமிழர்களும் உறுதியாக இருக்கின்ற நிலையில், எதற்காக பௌத்த பிக்குமார் வருகை தருகின்றனர்.

சோற்றுக்கும் தண்ணீருக்கும் வழியில்லாத நிலையில் தொல்பொருள் திணைக்களத்திற்கு எதற்காக நிதி ஒதுக்க வேண்டும் என அவர் கேள்வி எழுப்பினார். (நி)

# கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக பீடாதிபதியாக பேராசிரியர் சுனில் ஆரியரத்ன



(கொழும்பு)

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் சுனில் ஆரியரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

1985 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 32 ஆவது உறுப்புரைக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த ஐந்தாண்டு பதவிக் கால நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் பேராசிரியர் சுனில் ஆரியரத்னவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (நி)

## ஏப்ரல் விடுமுறைக்காக விசேட ரயில் சேவைகள்

(கொழும்பு)

ஏப்ரல் விடுமுறையை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் இடம்பெறும் என இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த சிறப்பு ரயில் சேவைகள் வழக்கமான ரயில் சேவைகளுக்கு மேலதிகமாக ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இயக்கப்படும் எனவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## கொத்து - பிரைட்றைஸ் விலைகளும் குறைப்பு

(கொழும்பு)

கொத்து ரொட்டி, உணவுப் பொதிகள் மற்றும் பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை இன்று முதல் குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இது தொடர்பிலான விலைகள் இன்று அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# பண்டிகைக் காலங்களில் அவதானத்துடன் செயற்படுங்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்யும்போது மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

விற்பனையாளர்கள் காலாவதியான பொருட்களை கொண்டுவந்து நகரங்களில் விற்பனை செய்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.

எனவே, பொதுமக்கள் பொருட்களை கொள்வனவு செய்யும் போது, அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ அறிவுறுத்தியுள்ளார். (நி)

# எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி பெருட்களின் விலைகள் குறையாது

## அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரிப் பொருட்களின் விலைகளை குறைக்கப்போவதில்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும், கிட்டத்தட்ட 75 வீதமான பேக்கரிகள் டீசல், விறகு அல்லது மின்சாரத்தை பயன்படுத்தியே இயங்குவதாக அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது செயற்பாட்டில் உள்ள 7,000 பேக்கரிகளில் 2,000 மட்டுமே எரிவாயுவைப் பயன்படுத்துகின்றன.

எதிர்காலத்தில் கோதுமை மா, நல்லெண்ணெய் மற்றும் முட்டையின் விலை குறையும் பட்சத்தில், பேக்கரி பொருட்களின் விலையை குறைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

05.04.2023
பங்குனி 22, புதன்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 10.07 மணிவரை
உத்தரம் பிற்பகல்-12.04 மணிவரை

சுபநேரம் -4.39-6.09 மணிவரை
இராகுகாலம்-12.09-1.39மணிவரை
பங்குனி உத்தரம், பூரணை விரதம்
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம் - சதயம், பூரட்டாதி

வளவன்




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், போசன சுகமுண்டு.




புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள் ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள்.




ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மருத்துச் செலவுகள் குறையும் வாய்ப்புண்டு.




பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், அரச வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




தொலைபேசி வழித் தகவல் மகழ்ச்சி தரும், விருந்தினர் வருகையுண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




மனதில் இனம்புரியாத சம்பவங்கள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், கற்ப[illegible]




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வரம் தரும் தெய்வங்களை [illegible]செல்வீர்கள்.




குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும். நாள், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரம் வந்தால் அதைத் தொடர்ந்து வெற்றி வருமென எதிர்பார்ப்பவன் புத்திசாலி.

## காத்தவராயர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த காத்தவராயர் உற்சவம்-2023 நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு வசந்த மண்டபபூசை இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் உள்ள காத்தவராயன் திருவுருவ சிலைக்கு வருடாந்த மடை உற்சவமும் இடம்பெறவுள்ளது. (4)

## மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மணவாளக் கோல உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு சங்காபிஷேகம், மூலமூர்த்தி பூஜை. திருவூஞ்சல் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என பிரதமகுரு சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் தெரிவித்ளார். (4)

## கடற்படை முகாமுக்காக

# ஊர்காவற்றுறை தம்பாட்டியில் காணி சுவீகரிக்க முயற்சி

## மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

**ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் கடற்படை முகாமுக்கு காணி சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அப்பகுதி மக்களின் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டது.**





தம்பாட்டிப் பகுதியில் கடற்படை முகாமை நிரந்தரமாக அமைக்க காணி சுவீகரிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று அப்பகுதி மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாரந்தனை வடக்கு ஜே/56 தம்பாட்டியில் உள்ள இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக காணி சுவீகரிக்கும் நோக்கில் குறித்த இரகசிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதும் இதனை அறிந்த அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணியை அளந்து கடற்படையினருக்கு வழங்குவதற்காக' அங்கு சென்ற நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த கடற்படையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை புகைப் படமெடுத்ததை அவதானிக்க முடிந்தது. (4-6-33)

## கோண்டாவில் சிவகாமி அம்பாள் பங்குனி உத்தர 1008 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பூசைகள் இடம் பெறும்.

மாலை 5 மணிக்கு பௌர்ணமி திருவிளக்கு பூசையும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசையும் திருவூஞ்சலும் இடம் பெற்று வீதி வலம் காட்சி இடம் பெறும். (4-6)

## யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில்

# உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான புத்தாண்டு சந்தை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டை முன்னிட்டு உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் உள்ளூர் உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கான சந்தை நிகழ்வு நாளை 6 மற்றும் 7,8,9 ஆம் திகதிகளில் யாழ். மாநகர சபையால் நடத்தப்படவுள்ளது.

ஆர்வமுள்ள முயற்சியாளர்கள் பண்ணைக் கடற்கரைப் பூங்காவின் மேற்குப் பக்கமாக 10X10 நீள அகலம் கொண்ட தற்காலிக கொட்டகையினை தாமே அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு யாழ். மாநகர சபையால் நாளொன்றிற்கு 500 ரூபாய் அறவிடப்படும்.

குறித்த இடத்திற்கான முற்பதிவுகளை தற்போது மேற் கொள்ள முடியும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (4)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நாடகத் துறை விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய 'கூடி வாழ்வோம்' என்ற நாடக நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் திங்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.



# மருத்துவமனை கழிவுகளை எரிக்க காணி வழங்கியது சிவபூமி அறக்கட்டளை

(அராலி)

யாழ். போதனா மருத்துவமனையின் கழிவுகளை தகனம் செய்வதற்கு சிவபூமி அறக்கட்டளையினர் காணியை வழங்கியுள்ளதாக செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியின் ஓவியக் கண்காட்சியில் கலந்து கொண்ட பின்னர் விருந்தினர் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். போதனா மருத்துவமனையில், மனித உடல்களில் இருந்து எடுக்கப் படும் அவயங்கள் மற்றும் வேறு கழிவுகளை எரிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் பல இடங்களை தெரிவு செய்திருந்த போதும் அதற்கான இடங்கள் எவையும்வழங்கப்படவில்லை.

ஆகையால் அந்தக் கழிவுகளை குருநாகலில் தகனம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. தற்போது மருத்துவமனையானது மிகுந்த நிதி நெருக்கடிகளிலும் மருந்துத் தட்டுப்பாடுகளிலும் உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் குறித்த கழிவுகளை எடுத்துச் செல்வதற்கு அதிக பண செலவு ஏற்படும். ஆகையால் எங்களது சிவபூமி அறக்கட்டளையின் ஒரு பகுதி காணியை இதற்காக நாங்கள் வழங்கியுள்ளோம் எனத் தெரிவித்தார். (4-6-104)

# வீட்டில் கசிப்பு உற்பத்தி சந்தேகநபர் தப்பியோட்டம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் திங்கட் கிழமை பிற்பகல் மட்டுவில் வடக்கு கிராமத்தில் 4 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

மட்டுவில் வடக்கில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட மதுவரி உத்தியோகத்தர்கள் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய பொருட்கள் சிலவற்றையும் மீட்டிருந்தனர்.

இருப்பினும் இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் தப்பித்துள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மதுவரித் திணைக்களத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



மூன்றாவது பங்குனித் திங்கள் மாத உற்சவத்தின் திருக்கையிலாச வாகன உற்சவம் நேற்று முன்தினம் இரவு வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. (படம்-கஜிந்தன்)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகன் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம், வலி.தெற்கு பிரதேச செயலாளரின் தலைமையில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் அனைத்து பரிபாலசபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு பரிபாலனசபை முன்னாள் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கியின் சட்டமூலத்தில் உள்ள விதிகள் அரசியலமைப்பிற்கு முரணானதல்ல

(கொழும்பு)

மத்திய வங்கி (திருத்த) சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பெற்றுக் கொண்டுள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சபாநாயகர், சட்டமூலத்தில் உள்ள எந்த விதிகளும் அரசியலமைப்பிற்கு முரணானவை அல்ல என நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார்.

அதன்படி, தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு, பாராளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது. (நி)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## ஏல விற்பனை

பரசங்குளம், புளியங்குளத்திலமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீட ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் பயிற்சி நிலையத்தில் பின்வரும் கால்நடைகள் 11.04.2023 செவ்வாய்க்கிழமை அன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள்:

| இல | அடையாள இல. | கடா/ மறி | வயது |
|---|---|---|---|
| 1 | 4303-0919-0056 | மறி | 6வருடங்கள் 5மாதங்கள் |
| 2 | 4303-0919-0067 | மறி | 5வருடங்கள் 7மாதங்கள் |
| 3 | 4303-0919-0069 | மறி | 5வருடங்கள் 5மாதங்கள் |
| 4 | 4303-0919-0072 | மறி | 5வருடங்கள் 5மாதங்கள் |
| 5 | 4303-0919-0075 | மறி | 5வருடங்கள் 5மாதங்கள் |
| 6 | 4303-0919-0084 | மறி | 5வருடங்கள் 3மாதங்கள் |
| 7 | 4303-0919-0096 | மறி | 5வருடங்கள் 8மாதங்கள் |
| 8 | 4303-0919-0097 | மறி | 5வருடங்கள் 8மாதங்கள் |
| 9 | 4303-0919-0112 | மறி | 4வருடங்கள் 3மாதங்கள் |
| 10 | 4303-0919-0122 | மறி | 4வருடங்கள் 2மாதங்கள் |
| 11 | 4303-0919-0127 | மறி | 3வருடங்கள் 11மாதங்கள் |
| 12 | 4303-0919-0140 | மறி | 3வருடங்கள் 8மாதங்கள் |
| 13 | 4303-0919-0141 | மறி | 3வருடங்கள் 8மாதங்கள் |
| 14 | 4303-0919-0149 | கடா | 3வருடங்கள் 6மாதங்கள் |
| 15 | 4303-0919-0172 | மறி | 3வருடங்கள் 4மாதங்கள் |
| 16 | 4303-0919-0175 | மறி | 3வருடங்கள் 4மாதங்கள் |
| 17 | 4303-0919-0181 | கடா | 3வருடங்கள் 2மாதங்கள் |
| 18 | 4303-0919-0183 | மறி | 2வருடங்கள் 5மாதங்கள் |
| 19 | 4303-0919-0184 | மறி | 2வருடங்கள் 5மாதங்கள் |
| 20 | 4303-0919-0194 | கடா | 1வருடம் 11மாதங்கள் |
| 21 | 4303-0919-0200 | மறி | 1வருடம் 11மாதங்கள் |
| 22 | 4303-0919-0218 | கடா | 1வருடம் 11மாதங்கள் |
| 23 | 4303-0919-0220 | மறி | 1வருடம் 11மாதங்கள் |
| 24 | 4303-0919-0223 | கடா | 1வருடம் 9மாதங்கள் |
| 25 | 4303-0919-0224 | கடா | 1வருடம் 9மாதங்கள் |
| 26 | 4303-0919-0228 | கடா | 1வருடம் 8மாதங்கள் |
| 27 | 4303-0919-0234 | கடா | 1வருடம் 5மாதங்கள் |
| 28 | 4303-0919-0239 | கடா | 1வருடம் 5மாதங்கள் |
| 29 | 4303-0919-0240 | கடா | 1வருடம் 5மாதங்கள் |

மாடுகள்:

| இல | அடையாள இல. | பசு/நாம்பன் | வயது |
|---|---|---|---|
| 1 | 4303-0919-0009 | பசு | 10 வருடங்கள் |
| 2 | 4303-0919-0061 | பசு | 5வருடங்கள் 3மாதங்கள் |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 10.04.2023 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் மீளப்பெற முடியாத பதிவுக் கட்டணமாக ரூபா 500.00 இனை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்வதுடன் 11.04.2023 அன்று ஏலவிற்பனைக்கு வருகை தரும் போது மீளப் பெறக்கூடியதாக ரூபா 10,000.00 இனையும் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்கு கொள்ள முடியும்.

**மக்கள் வங்கிக் கணக்கிலக்க விபரம்:**
**கணக்குரிமையாளர்: நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**கணக்கிலக்கம்: 97000006000276**
**நோக்கம்: ஏலவிற்பனைக்கான விண்ணப்பக் கட்டணம்**

ஏலவிற்பனையானது 11.04.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றி பெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த் கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்

**பதிவாளர் .** (அ-[illegible])

## பெறுகை அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
## சபை நிதி-2023

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவ்ராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வியாபாரப் பெயர்ப் பதிவைக் கொண்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில். (தொலைபேசி இலக்கங்கள் 021-222-2700, பக்ஸ் இல 021-222-0138, e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 05.04.2023 ஆம் திகதியிலிருந்து 18.04.2023 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் இடத்திலிருந்து 05.04.2023 ஆம் திகதியிலிருந்து 18.03.2023 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும். கேள்வி ஆவணத்தினை பெறுவதற்கு கோரிக்கை கடிதத்துடன் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில். எனும் முகவரிக்கு 19.04.2023 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 30 (முப்பது) நாட்கள் (19.05.2023) வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற்காட்டப்பட்டவாறு அமையும்

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை: மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | கேள்விப் பிணை: செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| NP/14/41/(10)/Acc/Proc/ Computer & Printer Items-2023 | Desktop Computer மற்றும் Printer | 1.9 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | 25,000.00 | 16.06.2023 |

**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை.** 05.04.2023

(சி-6290)

உ

தில்லையம்பதியாள் துணை

## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## பங்குனி உத்தர சங்காபிஷேகமும் பௌர்ணமித் திருவிளக்கு பூஜையும் - 2023

ராகம்:- கல்யாணி
ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியான கல்யாணி



## பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம்

**05.04.2023 புதன் காலை 8.00 மணிக்கு**
ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கும் சுற்றுப் பிரகார பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம், விசேட பூஜை, நண்பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.
**பிற்பகல் 4.00 மணிக்கு** ஸ்ரீ சக்ர பூஜை
**5.00 மணிக்கு** திருவிளக்குப் பூஜை
**6.30 மணிக்கு** வசந்தமண்டபப் பூஜை, திருவூஞ்சல்
**7.30 மணிக்கு** ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளிதெய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் பூந்தண்டிகையில் பழைய தெருவீதி உலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்.

**விழா உபயம்**
**அரச ஊழியர்களும்**
**ஓய்வூதியம் பெறுபவர்களும்**
**"தில்லையம்பதியாளே சிவகாமசுந்தரியே சரணம்"**
**இங்ஙனம்- பரிபாலன சபை.**

(சி-6298)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 145





இவ்வளவு சிரத்தை ஏற்படக் காரணம் என்ன? ஒருவேளை, ஒரு வேளை, வேறு எவனுக்காகவோ வைத்த ஏணியில் நான் ஏறி விட்டேனோ? எப்படியிருந்தாலும் இருக்கட்டும். முன்வைத்த காலைப் பின் வைக்க முடியாது. எல்லாம் சற்று நேரத்தில் தெரிந்து போய்விடுகிறது.

சுவரின் உச்சியருகில் வந்ததும் அவனுடைய கையைப் பிடித்து அந்தப் பெண் தூக்கிவிட்டாள். அப்போது நிலா வெளிச்சம் அவள் முகத்தில் அடித்தது. இதற்குள் ஆச்சரியப்படும் சக்தியையே வந்தியத்தேவன் இழந்து விட்டான். அதனால்தான் அவளுடைய முகம் வேளக்காரப் படையினர் துரத்திய தயிர்க்கூடைக்காரியின் முகம் போலத் தோன்றியும் அவன் சுவரிலிருந்து தவறி விழவில்லை. இன்றிரவு இதற்கு மேல் என்னென்ன வியப்பான நிகழ்ச்சிகள் நடந்தாலும் வியப்படைவதற்கு இடமில்லைதான்.

அப்போது ஏற்பட்ட அதிர்ச்சியினால் வந்தியத்தேவன் ஏணியிலிருந்து நழுவி விழுந்து விட இருந்தான். நல்ல வேளையாக, அங்கே சுவரில் நீட்டிக் கொண்டிருந்த கல்லைப் பிடித்துக் கொண்டு சமாளித்தான்.

இளைய் ராணியென்றால், பழுவூர் இளைய ராணியாகத்தான் இருக்கும். நான் இங்கே வந்து உட்கார்ந்தது அவளுக்கு எப்படித் தெரிந்தது? மாயமந்திரம் ஏதோ அவள் அறிந்திருக்க வேண்டும். தன்னைப் பார்ப்பதில் அவளுக்கு

"ஊம்! ஏன் விழித்துக் கொண்டு சுவர் மேலேயே உட்கார்ந்திருக்கிறாய்? ஏணியை எடுத்து உள்ளே இறக்கிவிட்டுக் குதி சீக்கிரம்!" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பெண் சரசரவென்று மரக்கிளையிலிருந்து கீழே இறங்கினாள்.

வந்தியத்தேவன் அவள் கூறியவாறே செய்தான். அவன் இறங்கிய இடம் ஒரு விஸ்தாரமான தோட்டம் என்று தெரிந்தது. சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய அரண்மனையின் மாடகூட கோபுரங்களும் சிகரங்களும் மங்கிய நிலா வெளிச்சத்தில் சொப்பன உலகக் காட்சியைப் போல் தோன்றின.

அது யாருடைய அரண்மனை என்று கேட்பதற்காக வந்தியத்தேவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். உடனே அந்தப் பெண் "உஷ்" என்று சொல்லி, உதட்டில் விரலை வைத்து எச்சரித்துவிட்டு முன்னால் நடந்தாள். வந்தியத்தேவன் அவளைத் தொடர்ந்து சென்றான்.

## முப்பத்து நான்காம் அத்தியாயம்
## லதா மண்டபம்

அடர்ந்த மாந்தோப்புக்கிடையே சென்ற ஒற்றையடிப் பாதையின் வழியாக அம்மங்கை விடுவிடுவென்று நடந்து செல்ல, வந்தியத்தேவனும் விரைவாகத் தொடர்ந்து சென்றான். மரஞ் செடிகளின் மீது மோதிக் கொள்ளாமல், அந்த இருளில் நடந்து செல்லுவது கஷ்டமாகத்தான் இருந்தது. ஒரு சமயம் இவன் மரத்தில் மோதிக் கொள்ளப் பார்த்துத் தயங்கி நின்றபோது, அந்த மங்கை திரும்பிப் பார்த்து, "ஏன் நிற்கிறாய்? வழி மறந்து போய் விட்டதா? நீதான் இருட்டில் கண் தெரிகிற மனிதன் ஆயிற்றே!" என்றாள்.

அதற்குப் பதிலாக வந்தியத்தேவன் உதட்டில் விரலை வைத்து முன்னால் அவள் சொன்னது போல் "உஷ்!" என்றான். அதேநேரத்தில் மதில் சுவருக்கு வெளியே ஏதோ சப்தம் கேட்டது. மனித நடமாட்டம் போலத் தொனித்தது. பிறகு இருவரும் மறுபடியும் நடந்தார்கள். கொஞ்சதூரம் போனதும் வல்லவரையன் இலேசாகச் சிரித்தான். அந்த மங்கை திரும்பிப் பார்த்து, "என்னத்தைக் கண்டு சிரிக்கிறாய்?" என்றாள்.

"கண்டு சிரிக்கவில்லை கேட்டுச் சிரிக்கிறேன்!"

"அப்படியென்றால்?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உலகத்திற்கு உப்பாய் இரு



ஒரு காலத்தில் இந்திரத்யும்னன் என்று ஒரு மாமன்னன் இருந்தான். அவன் ஆட்சி காலத்தில் மக்கள் போற்றும் வண்ணம் தான தர்மங்கள் செய்து, சிறப்பாக அரசாண்டு, நேரே சொர்க்கத்திற்குப் போனான். சொர்க்கபுரியின் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனை ஒரு நாள் சொர்க்கத்தின் 'தலை' கூப்பிடுவதாக தேவதூதன் வந்து சொன்னான்.

மன்னன் சென்று என்னவென்று கேட்ட போது 'உனக்கு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை கிளம்பத் தயாராக இரு.' என்று கட்டளை போட்டது 'தலை'. ஏனென்று மன்னன் கேட்டான். 'நீ செய்த நல்ல காரியங்களை நினைவில் வைத்திருக்க யாருமே இனிமேல் பூலோகத்தில் உயிருடன் இல்லை. இன்றுடன் அந்த கணக்குத் தீர்ந்து விடும். ஆகவே கிளம்பும் வழியைப் பார்' என்று பதில் வந்தது. 'இதற்குத் தீர்வே இல்லையா?' என்று மன்னன் முறையிட்டான். 'தலை' முகவாயைச் சொறிந்து கொண்டு யோசித்தது. பிறகு 'மன்னா, நீ கீழே போய் உனது நற்காரியங்களால் இன்னும் பலன் பெறும் ஒரு ஜீவனை யாராலும் கண்டுபிடித்தால் உனக்கு சொர்க்கம் நீடிக்கப்படும்' என்று சொன்னது.

மன்னனும் கிளம்பிப் பூலோகம் வந்தான். பல நூறு ஆண்டுகள் கடந்து விட்டிருந்தன.

அவன் வாழ்ந்த இடமே தலைகீழாக மாறிப் போயிருந்தது. மக்களில் யாரையும் அவனால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

மனதைத் தேற்றி நம்பிக்கையை ஏற்றிக் கொண்டு விடாமுயற்சியாகத் தேடி, இருப்பதிலேயே வயதான ஒரு மனிதரை சந்தித்தான். அவரிடம் 'ஐயா! உமக்கு இந்திரத்யும்னன் என்று இந்தப் பகுதியை அரசாண்ட மன்னனைப் பற்றித் தெரியுமா?' என்று ஆர்வத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் கேட்டான்.

வயோதிபர் இடுங்கிய கண்களால் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி விட்டார்.

'வேண்டுமானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப் பொந்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது. இரவில் அது விழித்த பின் அதனிடம் போய்க் கேள்' என்று சொல்லி விட்டார்.

வேறு வழியில்லாமல் இரவு வரை கோவில் நிழலில் உட்கார்ந்திருந்து விட்டு இரவு ஆந்தையைப் பார்த்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே. ~ பட்டினத்தார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாகன உதிரிப்பாகங்களின் விலை வட பகுதியில் குறையாதது ஏன்?

விழுந்த பாட்டில் குறி சுடுதல் என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

இதற்குப் பொருள் விளக்கம் சொல்வதை விட, உதாரணத்தின் மூலம் விளக்குவதே பொருத்தமாகும்.

ஆம், இப்போது அனைத்துப் பொருட்களின் விலைகளும் ஓரளவு குறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

எனினும் எங்கள் வடபுலத்தில் விலைக் குறைப்பு என்பது இன்னமும் அமுலுக்கு வராமல் இருப்பதுதான் வேதனைக்குரியது.

பொதுவில் அரிசி, மா, சீனி, பால்மா வகைகள் மற்றும் எரிபொருள், எரிவாயு என்பவற்றின் விலைகளை அரசாங்கம் நிர்ணயம் செய்வதால், அவற்றின் விலைமாற்றங்கள் நாடளாவிய ரீதியில் அமுலாகும்போது குறித்த பொருட்களின் விலைகள் வடபுலத்திலும் அமுலுக்கு வருகின்றன.

ஆனால் அநேகமான பொருட்கள் மற்றும் உதரிப்பாகங்களின் விலைகளை அந்தப் பொருட்களை விற்பனை செய்கின்ற நிறுவனங்களே தீர்மானித்துக் கொள்கின்றன.

அந்தவகையில் வடபுலத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் விலைகள் மிகவும் உச்சமாக இருப்பதாகப் பலரும் குறைபட்டுக் கொள்கின்றனர்.

அதாவது கொழும்பில் குறித்த வாகன உதிரிப்பாகம் ஒன்றின் விலை 2500 ரூபாயாக இருக்கும்போது, அதே பொருளின் விலை யாழ்ப்பாணத்தில் 7500 ரூபாயாக இருப்பதாகவும் பிளஸர் மோட்டார் சைக்கிளின் முன்பாகம் கொழும்பில் 7500 ரூபாயாக இருக்க, யாழ்ப்பாணத்தில் 17500 ரூபாயாக இருப்பதாகவும் பாவனையாளர்கள் வேதனையோடு தெரிவிக்கின்றனர்.

இங்குதான் வடபகுதி வர்த்தகர்கள் சிலர் விழுந்தபாட்டில் குறி சுடுகின்றனரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆம், அன்புக்குரிய வர்த்தகப் பெருமக்களே! இறைவன் இருக்கின்றான்; அவன் இல்லை என்ற கருத்துக்கள் மனிதர்க்கு மனிதர் வேறுபடலாம்.

ஆனால் இந்த உலகம் என்பது தர்மத்தின் வழியில் இயங்க வேண்டியது.

அந்தத் தர்மத்தை யார் மீறினாலும் அது ஊழ்வினையாக உருவெடுத்து உரிய நேரத்தில் தனது காரியத்தை நிறைவு செய்யும்.

ஆகையால் வர்த்தகப் பெருமக்கள் தங்கள் மனச்சாட்சிப்படி பொருட்களின் விலைகளை நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஏனெனில் நீங்கள் ஒவ்வொருவரும் நீதியாக நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் பாவனையாளர்கள் உங்கள் வர்த்தக நிலையத்துப் படிகளில் ஏறுகின்றனர்.

எனவே உங்கள் மீதான அவர்களின் நம்பிக்கைக்கு மோசம் செய்துவிடாதீர்கள்.

# சுருக்குவலை தொழிலை கட்டுப்படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுருக்குவலைதொழிலை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் தொடர்ச்சியாக அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்கள் கூட்டாக தெரிவித்தன.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தனர்.

சுருக்குவலைக்கு அனுமதிவழங்கப்பட்ட இரண்டே முக்கால் கண் கொண்டவலையினை பயன்படுத்தாமல் அதற்கு குறைவான கண்கொண்ட வலைகளை பயன்படுத்தி சுருக்கு வலைத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் காரணமாக அதிகளவிலான சிறிய மீன்கள் குறித்த வலைகளில் அகப்படுவதனால் பாரம்பரியமாக மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை.

அதுமட்டுமல்லாது சுருக்குவலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல் டைன்மற் அடித்தல் காரணமாக கடல் உயிர்வாழ் உயிரினங்களின் பல்வகைத்தன்மை அழிவடைவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

அண்மையில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட கலந்துரையாடலின் பின்னர் சட்டவிரோத சுருக்கு வலைத் தொழிலை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய 70 வீதமான சட்டவிரோத சுருக்கு வலைத் தொழில்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமைக்கு சங்கங்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆகவே வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகியபகுதிகளில்இடம்பெறும் சட்டவிரோத சுருக்குவலைத் தொழிலை தொடர்ச்சியாக கட்டுப் படுத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை முன்வைத்தனர். (ம-7,9)

## நெல்லியடியில் விபத்து நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி நெல்லியடி நாவலர் மடம் பகுதியில் நேற்று ஏற்பட்ட விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ள நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிவந்த கன்ரர் ரக வாகனமும், நெல்லியடி பகுதியிலிருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனமும் மோதிக் கொண்டதிலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஹயஸ் ரக வாகனத்தில் வந்த மூவரும் கன்ரர் வாகனத்தை செலுத்தி வந்த சாரதியும் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,9,60,104)

### நாவலர் கலாசார மண்டப விவகாரம்

## ஆளுநரின் உத்தரவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடை

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ் மாநகர சபையை வடமாகாண ஆளுநர் வெளியேற பணித்தமைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் இடைக்கால கட்டளை விதித்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை யிட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் யாழ் மாநகர சபையினை நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து வெளியேற பணித்து [illegible] கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்துள்ளார்.

இதற்கு எதிராக யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கில் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் ஆஜராகியிருந்தபோதே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் இந்த இடைக்காலக் கட்டளையை பிறப்பித்துள்ளது. குறித்த வழக்கு ஏப்ரல் 26ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்[illegible]ள்ளது. (ம-7,33,60)

## கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் இன்று குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்க பெற்ற தாயுமானவர் சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்குப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரையான சுபவேளையில் இடம்பெறும். (ம-7,9)

## குருநகரை சேர்ந்த இரு மீனவர்கள் இந்திய எல்லையில் கைது

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு மீனவர்கள் இந்திய எல்லைக்குள் உள்நுழைந்ததால் இந்திய கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்கள் பயணித்த படகுகள் இரண்டும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிய முடிகிறது. (ம-7,9,104)

## கொள்கை வட்டி வீதத்தை மாற்றமில்லாமல் பேண நாணய சபை தீர்மானம்

(கொழும்பு)

சந்தை வட்டி வீதங்களை தீர்மானிக்கும் மத்தியவங்கியின் கொள்கை வட்டி வீதத்தை மாற்றமில்லாமல் பேணுவதற்கு நாணயசபை தீர்மானித்துள்ளது.

பணவீக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கையாக தொடர்ந்தும் கடும் நாணயக் கொள்கையை பின்பற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எதிர்பார்த்தவாறு பணவீக்கம் குறைவடையும் நிலை காணப்படுவதாகவும் மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதியளவில் பணவீக்கம் 10 வீதத்தை விட குறைந்த எண்ணிக்கையில் அமையும் என்பதே மத்திய வங்கியின் எதிர்பார்ப்பாகும். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது போராட்டத்தை நசுக்கவே புதிய பயங்கரவாதச் சட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(முறிகண்டி)

**எமது போராட்டத்தினை நசுக்குவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்தார்.**

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் தற்பொழுது இருக்கின்ற பயங்கரவாத தடுப்பு சட்டத்தினை நீக்கி பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்ற புதிய சட்டத்தை உருவாக்கி இனப்படுகொலை செய்யப்பட்டு எஞ்சிய மக்களை கடத்தவும் காணாமல் போக செய்வதற்குமாக குறித்த சட்டத்தை உருவாக்க தற்போதைய அரசாங்கம் முயல்கிறது. இந்த புதிய சட்டத்தால் எங்களுடைய ஜனநாயக ரீதியான போராட்டம் எங்களுக்கு நீதி கோருகின்ற பேரணிகள், ஆர்ப்பாட்டங்களில் எல்லாம் சுயாதீனமாக இயங்குகின்ற ஊடகங்கள் கூட எமது பிரச்சினைகளை அடையாளம் கண்டு வெளிக்கொண்டு வர முடியாத அளவிற்கு குறித்த சட்டம் அமையப்போவதாக நாங்கள் அறிகின்றோம்.

வடக்கு-கிழக்கிலே வாழுகின்ற ஒட்டுமொத்த தமிழர்களிற்கும் ஆபத்தான சட்டமாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம். இந்த சட்டத்தை வர்த்தமானி ஊடாக அரசாங்கம் கொண்டு வருவதற்கு முயன்றால் அதனை நாங்கள் எதிர்க்கின்றோம்.

பாதிக்கப்பட்ட தாய்மாராகிய எமக்கு இதுவரை நீதி கிடைக்காதபோதும், நாங்கள் சர்வதேசத்தின் ஊடாக நீதி வேண்டி நிற்கின்றோம். இலங்கை அரசினால் ஒருபோதும் எங்களிற்கான நீதி கிடைக்கப்போவதில்லை. ஒட்டுமொத்தமாக வடகிழக்கு தமிழர்களிற்கான சுய உரிமையும் கிடைக்கப்போவதில்லை.

தமிழ் அரசியல்வாதிகளும் ஏனைய சகோதர இனத்து அரசியல்வாதிகளும் இந்த சட்டத்தை எதிர்த்து இல்லாது ஒழிக்க வேண்டும் என கேட்டு நிற்கின்றோம்.

இந்த சட்டம் நடைமுறைக்கு வருமாக இருந்தால், ஊடகங்களையும் சமூக வலைத்தளங்களையும் முடக்கி அவர்கள் எம்மோடு பயணிக்க முடியாத அளவிற்கு இந்த சட்டம் கொண்டுவரப்படும் என நாங்கள் அறிந்திருக்கின்றோம்.

இப்படியான விடயங்களை அவர்கள் வெளிக்கொண்டு வரும்போது, அவர்களை கைது செய்து மரண தண்டனைக்குள்ளாக்குகின்ற விடயங்கள் கூட நடக்கும் என்று நாங்கள் அறிகின்றோம்.

ஆகவேதான் நாங்கள் இதை முற்றாக நிராகரிக்கின்றோம் என தெரிவித்தார். (4-6-100)

# இனந்தெரியாத நபர்களால் வீடொன்று தீக்கிரை



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உருத்திரபுரம் பகுதியில் நேற்று அதிகாலை இனம் தெரியாத நபர்களால் வீடொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. வீட்டு உரிமையாளர்கள் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதுடன் வீட்டில் இருந்த அனைத்துப் பொருட்களும் முற்றாக எரிந்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-6-316)

### மல்லாவி ஆதார மருத்துவமனையில்

# மகப்பேற்றியல், பெண் நோயியல் சிகிச்சை ஆரம்பித்து வைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவி பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாக இருந்த மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் சிகிச்சை மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மல்லாவி பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாக இருந்த மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் சிகிச்சை மல்லாவி ஆதார மருத்துவமனையில் மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் நிபுணரான வைத்தியர் வை.சிவகரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இது மல்லாவியிலிருந்து நீண்டதூரப் பயணம் மேற்கொண்டு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளுக்கு செல்லும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. (4-6-315)



அகில இலங்கை கர்நாடக சங்கீத தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றிய 3 போட்டிகளிலும் யா/சென். ஜோண்ஸ் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 260 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 150 | 250 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 220 | 400 |
| தக்காளி | 100 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 120 | 100 | 150 |
| கரட் | 120 | 180 | 160 | 240 |
| பூசணி | 50 | 80 | 50 | 50 |
| புடோல் | 150 | 140 | 140 | 160 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 280 | 350 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120 | 130 |
| பாகற்காய் | 350 | 400 | 350 | 300 |
| வெண்டக்காய் | 260 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 250 | 300 | 240 |
| லீக்ஸ் | 250 | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 130 | 100 | 140 | 160 |
| கறிமிளகாய் | 200 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 700 | 1000 |
| போஞ்சி | 200 | 250 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 140 | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 250 | 300 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 160 | 200 | 480 |
| முள்ளங்கி | 60 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 150 | 120 |

# பறவைகளை அடைத்து வைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கிளிநொச்சிப்பகுதியில் அமைந்துள்ள தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் சுதந்திரமாக பறந்து திரிய வேண்டிய பறவைகளை அடைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து சில பறவை இனங்கள் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (4-6-316)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 80 ஆவது மாணவர் முதல்வர் சபையினால் Be the Change எனும் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டமாக யா/புங்குடுதீவு மத்திய கல்லூரி மாணவர்களுக்கான கற்றலுக்கான வழிகாட்டல் மற்றும் சுய முன்னேற்றம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அன்று புங்குடுதீவு மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாஃப் எரிவாயு...

அதன்படி 12.5 கிலோ எடை கொண்ட சிலிண்டரின் விலை 1,290 ரூபாயினால் குறைக்கப்பட்டு புதிய விலை 3,990 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## கிளிநொச்சியில்...

மாமனாருக்கும்மருமகனுக்கும்இடம் பெற்ற வாக்குவாதம் முற்றியதில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரிந்திருந்த தனது மனைவியை பார்க்க சென்ற குறித்த நபரை, மனைவியின் தந்தை வழிமறித்துள்ளார். இதன்போது இருவருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த மாமனார் மண்வெட்டிப் பிடியினால் தாக்கியுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் படுகாயமடைந்த குறித்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் ஆறுமுகம் பிள்ளை துஸ்யந்தன் எனும் 34 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,100)



















## 'சிவதோஷம்...

ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.

சைவ தமிழர்கள் சிவன் வணக்கத்தை மிகவும் கண்டிப்பாகவும், கரிசனையோடும் மேற்கொண்டு வருவதாகவும் சிறீதரன் சுட்டிக்காட்டினார்.

ஏற்கெனவே நாடு மிகவும் மோசமான நிலைக்கு சென்றிருந்ததுடன், அரசாங்கத்தின் மனங்களில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்பொழுது சர்வதேச நாடுகள்பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஒரு இனத்தின் அடிப்படை வணக்க முறைகளை சிதைத்தெறியும் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். (ம-7,9)

## எரிபொருள்...

தமிழ் - சித்திரை புது வருடப்பிறப்பை முன்னிட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதற்கமைய, விசேட சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருள் கோட்டா 15 லீற்றர் வரை அதிகரிக்கப்படுகிறது.

சாதாரண சேவைகளில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருள் கோட்டா 05 லீற்றரில் இருந்து 8 லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்கான எரிபொருள் கோட்டா 7 லீற்றராகவும், கார்களுக்கான கோட்டா 30 லீற்றராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பஸ்களுக்கான எரிபொருள் கோட்டா 40 லீற்றரில் இருந்து 60 லீற்றர் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

வேன்களுக்கான எரிபொருள் கோட்டா 20 லீற்றரில் இருந்து 30 லீற்றர் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

லொறிகளுக்கான எரிபொருள் கோட்டா 50 லீற்றரில் இருந்து 75 லீற்றர் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், விசேட தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என எரிசக்தி அமைச்சர் கூறியுள்ளார். (ம-7,9)

## பூநகரியில்...

காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் நோக்கில் நில அளவீடு மேற்கொள்வதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து அளவீட்டுப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

இறால் வளர்ப்பு திட்டத்திற்கு 98 ஏக்கர் காணியினை தனியார் ஒருவருக்கு வ்ழங்கும் நோக்கில் நேற்று நில அள வீடு செய்ய முற்பட்டபோது நில அளவீட்டுப் பணிகள் பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளின்மை, 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்த காணிகள் இன்றி வாழுதல் என பல்வேறு காணித் தேவைகள் உள்ள போதும் தனியாருக்கு சொந்தமான காணிகள் மற்றும் அரச காணிகள் உள்ளடங்களாக 98 ஏக்கர் காணியை தனியாருக்கு வழங்கும் நோக்கில் நில அள வீடு செய்வதற்கான நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்ட இருந்த நிலையில் குறித்த அளவீட்டுப் பணிகள் தடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு காணித் தேவைகள் உள்ள நிலையில் தமது பகுதியில் உள்ள காணிகளை வழங்க முடியாது என்றும் எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7,9,315)

## 'இலங்கை...

பிரச்சினை என்று குறிப்பிட்டுக்கொண்டு சிங்களவர்களை இனப்படுகொலையாளர்கள் என சித்தரிக்கிறார்கள்.

பௌத்த மத மரபுரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இனங்களை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் பாராளுமன்றத்தில் ஆற்றும் பொய்யான உரை வெட்கக்கேடானது.

நாட்டுக்குள் இனவாத முரண் பாடுகள் தோற்றம் பெற்றால் பொருளாதார ரீதியில் முன்னேற்ற மடைய முடியாது. வடுகங்கல பகுதியில் உள்ள சிவன் கோயிலை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் அரசியல் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

புராதன பௌத்த தொல்பொருள் சின்னங்களை சிதைத்து சட்டத்திற்கு முரணாக சிவன் கோயிலை அமைக்கும் தரப்பினருக்கு எதிராக சிவனின் சாபம் திரும்புமே தவிர ஏனைய தரப்பினருக்கு அல்ல, வடுங்கல பகுதியில் பௌத்த சின்னங்கள் காணப்பட்டுள்ளமை தொல்பொருள் சான்றுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு இந்துக் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற் பாடுகளினால்தான் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் குருந்தூர் மலையில் பழைமை வாய்ந்த பௌத்த மரபுரிமைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது, பௌத்த வழிபாடுகளுக்கும் தமிழ் அரசியல் தரப்பினர் தடையேற்படுத்தியுள்ளார்கள்.

தேரவாத பௌத்த கொள்கையை பாதுகாக்கும் ஒரு நாடாக இலங்கை உள்ளது.

ஆகவே பௌத்த மரபுரிமை களை பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்டு. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை எவராலும் மறுக்க முடியாது என்றார். (ம-7,9)

## 12 மாணவர்கள்...

முன்பள்ளி ஒன்றில் பக்கெட் பால் பருகிய 12 மாணவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

முன்பள்ளி மாணவர்களுக்கு சத்தூட்டும் திட்டத்தினூடாக நிறுவன மொன்று பக்கெட் பால் வழங்கப்பட்டு அப்பால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

மாணவர்கள் பால் பருகிய நிலையில் முன்பள்ளியில் வைத்து வாந்தியெடுத்துள்ளனர். இந்நிலையில் மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மாணவர்களுக்கு வயிற்றோட்டம் வாந்தி ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள் ளார்கள். பக்கெட் பாலின் மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-7,9)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Account Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு

**077 367 1062**

(15147)

## சமையல் ஆள் தேவை

யாழ் நகரில் இருவருக்கு சமையல் வேலை செய்யக்கூடிய சமையல் ஆள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 377 4446**

(C-6307)


## கப்பல்...

இடம் பெற்றுள்ளது.

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா தலைமையில் இக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் உள்ள தலைமன்னாருக்கும், இந்தியாவின் தென் முனையான தனுஷ்கோடிக்கும் இடையிலான ராமர்பால பகுதியை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தலைமன்னார் முனையத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஏற்படும் சாதகத்தன்மை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து தமிழகத்துக்கு 3 கோடி பக்தர்கள் வருகின்றனர். அவர்களில் ஒரு பகுதியினரை ராமர்பாலம் ஊடாக அழைத்து வந்தால் அதன்மூலம் சுற்றுலாத்துறை மேம்படும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ் விவகாரம் தொடர்பில் நடைபெற்ற ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் சாதகமாக முடிவடைந்துள்ளதாக இருதரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

இக்கலந்துரையாடல் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பங்குபற்றலுடன் நடைபெற்றதுடன், இந்திய தூதரகத்தின் துணை தூதுவரும் அந்நாட்டு முதலீட்டாளர்களும் பங்கேற்றிருந்தனர். (ம-7.9)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15145)

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு) 51 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை 125,000/=
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15150)

**076 755 8606**
**077 638 5683**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம் :**
  காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15145)

**077 814 7389, 077 986 5457**

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி,யாழ்ப்பாணம்.

**புதிய கல்வியாண்டில்**

ஆரம்பப் பிரிவுக்கான
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**05-04-2023**
புதன்கிழமை, பி.ப 3.30 மணி

தரம் 1 | தரம் 2 | தரம் 3 | தரம் 4 | தரம் 5

(புலமைப்பரிசில் விசேட வகுப்புக்கள்)

- யாழ் மாவட்ட பிரபல பாடசாலைஆசிரியர்களின் கற்பித்தலில்...
- மாதாந்தப் பரீட்சை – "வெற்றிக்கு வித்து"
- ஒவ்வொரு மாணவர்க்கும் தனிப்பட்ட கவனிப்பு
- அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(15137)

தொடர்புகளுக்கு **077 459 8440**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-6306)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள்

(C-6306)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற்.வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200,000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15150)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

## NEW SCIENCE HALL

**A/L - PHYSICS**
**(English Medium)**
**New Topic Starts**

**2023 - Unit - 8**
**Current Electricity**

Thursday 7.30 A.M to 9.30 A.M
Saturday 9.30 A.M to 11.30 A.M
Sunday 9.30 A.M to 11.30 A.M

Normal TimeTable

**2024 - Unit - 2**
**Hydrostatic**

Saturday, Sunday } 7.30 A.M to 9.30 AM

**By : M.Kugan**
B.Sc (Hons) Dip.in.Edu

(C-6302)

## வேலையாட்கள் தேவை

தச்சு வேலையில் அனுபவம் உள்ள வேலையாட்கள் மரத் தளபாடங்கள், பெயின்டிங் உதவியாளர்கள், தச்சுவேலை பழக விரும்புபவர்கள்

**077 713 0872**

கோண்டாவில்,
யாழ்ப்பாணம்

(15143)

## பயிற்சியுடன் கூடிய உடனடி வேலைவாய்ப்பு

வட மாகாணத்தில் இயங்கிவரும் எமது W.E.C நிறுவனம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதால் பல்வேறு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகிறது.

**பதவி வெற்றிடங்கள்**

- வரவேற்பாளர்
- முகாமையாளர்
- உதவி முகாமையாளர்
- நிர்வாக உத்தியோகத்தர்
- மேற்பார்வையாளர்
- கணக்காளர்

தகைமை – A/L, O/L, 10

உங்கள் பெயர் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை 077 062 1631 எனும் இலக்கத்துக்கு SMS செய்யவும் மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ள தொடர்பு கொள்ளவும்.

(15114)

**077 062 1631, 077 298 6763**
**077 969 1759**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.